தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயஎரு	மலர்
சஅ	ஆனந்த, வைகாசி (1974 — மே — ஜூன்)	உ

ஆறும் காலும்

பேராசிரியர். சி கோவிந்தராசன், கரந்தை.

சோழவளநாட்டின் கடற்கரைப் பட்டினங்களுள் ஒன்றுன காரைக்காலுக்கு மேற்கே மூன்றுகல் தொலைவில் அமைந்துள்ள சிற்றூரே திருநள்ளாறு என்ற சிவத்தலமாகும். இவ்வூர் பிரஞ்சுக்காரரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காரைக்கால் வட்டத்துள் அடங்கியதாகும். இவ்வூரிற்குச் செல்ல. மாயூரத்திலிருந்து பேரளம் வழியாகப் புகைவண்டிப் பாதையுண்டு.

நள்ளாறு என்ற பெயர், ஆற்றின் பெயர் ஊருக்கு அமைந்த விளக்கப் பெயரேயாம் (Descriptive names.) காவிரியிலிருந்து பிரிந்தோடிப் பிரியும் கிளையாறுகளில், அரிசிலாறு வாஞ்சியாறு என்னும் இரண்டாறுகளின் நடுவே அமைந்த ஊராதலின் நள்ளாறு என்று பெயர்பெற்றதெனலாம். (நள் = நடு) நண்பகல் என்பது போலாம்.

இதற்குச் சான்ருக, கொங்கு நாட்டில் அவிநாசியூரும் பழைய திருப்புக்கொளியூரும் இடைவெளியிட்டு அமைந்திருக்க, இடையே ஆறென்று ஓடியது. ஊர்கட்கிடையே ஓடிய ஆறு காலப்போக்கில் தூர்ந்து ஓடையளவில் இன்று நிற்பதாயினும், அன்று அவ்வாற்றிற் கமைந்த நள்ளாறு என்னும் பெயரே இன்று வழக்கிலுள்ளது. இவ்வாறு, முன்னொரு காலத்தில் இரண்டூர்கட்கிடையே ஓடிவந்த ஆறு நள்ளாறென்று பெயர் பெற. அதன் கரையிலமைந்த ஊர் ஆற்றின் பெயரைப் பெற்றது என்பதும் ஒன்றும். மற்றும், கடலில் கலக்கும் அண்மையுடைய அரிசிலாறு, வாஞ்சியாறு ஆகியவற்றில் உப்புநீர் ஓதம் கொள்ளுதற்கு முந்திய நன்னீர்ப் பகுதியில் ஒருவகை நண்டுகள்

மிகுதியாக வாழ்கின்றன. அவற்றை 'ஆற்று நண்டு' என்பர். அரையடி குறுக்களவுள்ளதாகவும் அந்நண்டுகள் வளர்கின்றன. இத்தகைய நண்டுகளைப் பழந்தமிழர் 'நள்ளி' என்றனர். நள்ளி மிகுந்துள்ள ஆறு நள்ளியாறு என்று பெயர்பெற்று, காலப்போக்கில் நள்ளாறென்ருகி, அதன் கரையூரும் அப்பெயர் பெற்றுள்ளது என்றும் கருதமுடிகின்றது.

தேவார மூவரால் பாடல்பெற்ற சிவத்தலமாதலின் திரு என்ற அடைமொழி சேர்ந்து திருநள்ளாறு என்று பெயர் பெற்றுள்ளது. கி. பி. 7-ஆம் நூற்ருண்டிலும் நள்ளாறு என்ற பெயர் வழக்கிலிருந்துள்ளதென்பதை ஞானசம்பந்தர் பாடல் களால் அறியமுடிகின்றது. எனவே, இப்பெயர் மிகப் பழமை யான பெயராகவே தொடர்ந்துள்ளதென்பது தெளிவாம்.

கி. பி, 11-ஆம் நூற்ருண்டில் இவ்வூர் விருதராசபயங்கரச் சதுர்வேதிமங்கலமென்று பெயர் மாற்றப்பட்ட நிலையிலும், பழைய தமிழ்ப் பெயரின் நிலைப்பினால், "திருநள்ளாருன விருதராசபயங்கரச்சதுர்வேதிமங்கலம்" என்றே கல்வெட்டுக் களில் குறிக்கப்பட்டுள்ளது,

ஆற்றின் பெயர் ஊருக்கும் ஆகியுள்ள இயல்பினை, பழையாறு, செய்யாறு. தெள்ளாறு, கோட்டாறு என்ற ஊர்ப் பெயர்களால் அறியலாகும்.

திருநள்ளாற்றைச் சார்ந்துள்ள காரைக்கால் என்ற ஊர்ப் பெயர், திருநள்ளாற்றுக் கோயிலிலுள்ள கி. பி. 11-ஆம் நூற்ருண்டுக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளது. இப் பெயரும் ஆற்றின் பெயரால் உண்டானதேயாம்

சோழர் காலத்தில் உண்டான கல்வெட்டுக்களிலும் செப் பேட்டுச் சாசனங்களிலும் 'கால்' என்ற சொல் கிளையாற்றினைக் குறிப்பதாகவும் அமைந்துளது முதல் இராசேந்திரனுடைய திரிபுவனமாதேவிச்சதுர்வேதிமங்கலத்துச் செப்பேடுகளில், வெண்ணியாற்றிலிருந்து பிரியும் ஆறு, "வெண்ணி நீரோடு கால்" என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்காலே வெட்டாருகும். இதுபோலவே, காவிரியின் கிளைவழிக் கிளைத்தோடிக் கடலில் கலக்கும் சிற்ருராகிய அரிசிற்காலின் கரையிலமைந்ததினுலும், அக்கால் அப்பகுதியில் இயற்கையாக, சுண்ணும்புக் காரை நிறைந்த நிலத்தினூடே சென்று கடலில் கலப்பதாலும் 'காரைக்கால்' என்று பெயர்பெற்றுளது. கரையிலமைந்த

ஊரும் அப்பெயரைப் பெற்று இன்றும் மாருது வழக்கிலுள்ளது. இவ்வாறு சிற்ருராகிய காலின் பெயராலும் ஊர்கள் பெயர் பெற்றுள்ளதை, சோழநாட்டிலுள்ள, வடகால், மண்ணிக்கால், முள்ளிக்கால் என்ற ஊர்ப் பெயர்களினுலும் உணரலாகும்.

நள்ளாற்றுக் கோயில்

திருநள்ளாற்றின் நடுவேயமைந்துள்ள சிவன் கோயில், கற்றளியாகப் பெரிய அளவில கட்டப்பட்டுள்ளது. இவ்வூரில் கி. பி 7-ஆம் நூற்ருண்டிலும், அதற்கு முன்னரும் சமணரும் சாக்கியரும் நன்முறையில் வாழ்ந்திருந்தனரென்பதை, கோயிலிலுள்ள கல்வெட்டுச் செய்திகளைக்கொண்டும், ஞானசம்பந்தரின் பாடற் பகுதிகளைக் கொண்டும் அறியமுடிகின்றது

திருநள்ளாற்றுக் கோயில் சிவன் கோயிலாகத் திகழ்வதாயினும், சனிக்கோள் தனிச் சிறப்புடன் விளங்கிவருதல் நாடறிந்ததேயாம். இதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் இன்றெனினும், ஞானசம்பந்தர் திருநள்ளாற்றுப் பதிகத்தில் பாடிய, 'நளன் கெழுவி நாளும் வழிபாடுசெய் நள்ளாறே" என்ற அடியைக்கொண்டு, பிற்காலத்தல் எழுதப்பெற்ற தலபுராணச் செய்தியும், மக்கள் வழித்தொடரும் செய்தியும் கலிநீங்கப்பெற்ற நிடதநாட்டு நளனைத் தொடர்புபடுத்திச் சனிக் கடவுளுக்குரிய தலமாகவும் திருநள்ளாற்றினைச் சிறப்பிக்கின்றனர்.

கல்வெட்டுக்கள்

திருநள்ளாற்றுக் கோயிலில், முதல் இராசராசனுடைய காலம் முதலாகப் பல சோழ மன்னராலும், பாண்டிய மன்னராலும், போசள மன்னராலும் செய்யப்பட்ட அறச்செயல்களைக் கூறும் கல்வெட்டுக்கள் பலவாயினும் அவை இதுவரையில் கல்லெழுத்துத் துறையினராலோ, பிறராலோ வெளியிடப் பெறவில்லை. யான் படியெடுத்துள்ள கல்வெட்டுக்களில் இரண்டு கல்வெட்டுக்களே இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன. ஒன்றுமுதல் இராசாதிராசனின் மெய்க்கீர்த்திப் பகுதி: மற்ருென்று கோனேரின்மைகொண்டான் என்று சிறப்பிக்கப்பெறும் சோழமன்னன் நள்ளாறுடைய பெருமானுக்களித்த தேவதான இறையிலி நிபந்தத்தைக் குறிப்பதாகும். இவ்விரண்டு கல்வெட்டுக்களும் கி. பி 11-ஆம் நூற்ருண்டுக்குரியவை.

கல்வெட்டு — க. "மெய்க்கீர்த்தி"

மூலவர், கருவறையின் தென்புறச் சுவரிலுள்ளது.

ஸ்வஸ்திஸ்ரீ திங்களொத்ததன் தொங்கல் வெண்குடைக்கீழ், நிலமகள் நிலவ, மலர்மகட் புணரச், செங்கோலோச்சிக் கருங் கலி கடிந்து, தந்தையர் தமையர் தம்பியர் தன்திரு மைந்தர் அநிவரை மணிமுடி சூட்டிக், கன்னிகாவலர் தென்னவர் மூவருள், வானகம் ஒருவநுக்கருளி காநகம் ஒருவருக்களித்து, பாருசிலைச் சேரலன் வேலைகெழு, காந்தளூர்ச்சாலை கலமறுப் பித்தி, லங்கையற்கரைசையும் புலங்கல வல்லவனையும், கன்ன குச்சியர்க் காவலனையும், பொன்னனி முடித்தலை கடிந்து, தன் கொடிப்படை மேவிக், கன்னுடைகர்விடு கடகரி புரளத், தன்னுடையிற் றமிழ்ப் பாணி கொண். டொண்ணூர் வச்சிர நெடு வாள் விச்சையன், வெருநெளித் தஞ்சி யோடத், தன் வஞ்சினப் படையா லாங்கவன், பிதாவை மாதாவொடு இத்தரைமலி, வீங்குநர்ப் பூண்டூர் வெஞ்சமத் தகப்படுத்தி, யப்படை ஆஹவ மல்லன் பயத்தொடும் வரவிடு. ஒற்றரை வெருவரப் பிடிப்பித், தாங்கவர் மார்வில் ஆஹவமல்லனும், யாங்கணும் இரிந்த நநெந நன்கெழுதிச், செலுத்திய பின்னைத் தன்புலிக்கொடிப் படையும், இரொட்டலரி வாரண வரிசைக் கடல் புரை, சிறுதுறை பெருந் துறை தெய்வ ஹிமாதியே, னல்லதுறை மூன்றிலுமுணர புநலாட்டி, யாங்கவ நேத்தக கிரியில், ஓங்குகுல உழுவையே றெழுதி, உயர் ஜயத்தம்ஹம் எழில்பெற நிறுத்தித் தன்கழல் பணிந்தொழுகும் அரைசரொடும் செண்டாடிப், பொருபுலி வீரக் கொடியொடு தியாகக் கொடியும் ... . (சிதைவு)

கல்வெட்டு — உ "தேவதான இறையிலி"

மகாமண்டபச் சுற்றுச் சுவரிலுள்ளது

1. திருபுவனச் சக்கரவத்தி கோநேரின்மை கொண்டான் ஜயங்கொண்ட சோழ வளநாட்டு முழையூர் நாட்டுத் திருநள்ளாறுடையார் கோயிலில் தேவர்கன்மிக்கும் மாயேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும் ஸ்ரீகார்யஞ் செய்வானுக்கும் இத்தேவர்க்குத் திருமடை விளாகமும் திருநந்தவனமும் உள்ளிட்டு வேண்டுவன்னுயிற்றுக்குத் திருநள்ளாருன விருத ராஜப்பயங்கரச் சருப்பேதிமங்கலத்துப் பிடாகை திருநள்ளாற்று நிலத்துச் சாத்தசீயர்க்குப் பதிநாருவது அளவில் நீங்கலாக நீக்கின ஊர்நத்தத்துக்கு

2. ஊர்நத்தமாகச் செய்த ரு தேவர் திருமடைவிளாகத் துக்கு சேரவான நிலமும், கடலாடு திருவீதியாகச்செய்த நிலமும், வாதுசெய்வார் திருநந்தவனத்துக்கும் சிவமதி திருநந்தவனத்

துக்கும், திருநாவுக்கரைசின் திருநந்தவனத்துக்கும் சேரவான் நிலமும் உட்பட்டது நிலம் இரண்டரையே மூன்று மாவும், கொல்லை நிலம் இரண்டெய் எழுமாவும், பதின்னுருவது…… …க் குறைந்த நிலத்தோபாதி மூன்று மா முக்காணியும் ஐஞ்சாவது முதல் இத்தேவர்க்குத் தேவதான இறையிலியாக இடமொன்றுடையான் ……. …….. (சிதைவு)

மெய்க்கீர்த்திக் கல்வெட்டு. முதல் இராசாதிராசன், சாளுக்கியப் பேரரசன் ஆகவமல்லனுடன் நிகழ்த்திய போர்ச் செயல்களையும் சோழமன்னன் தனது புலி இலச்சினையினை வெற்றித் தூணிலும் பிறவாறும் பகைவர் நாட்டில் நிறுவிய வரலாற்றினையும், சோழ வீரர்கள் சாளுக்கிய ஒற்றரைப் பிடித்து இழிவு செய்தனுப்பிய நிகழ்ச்சியினையும், சுருக்கமாகவும் தெளிவாகவும் குறிப்பிடுகின்றது.

சாளுக்கிய நாட்டில் ஓடும் பேராறுகளிலமைந்த துறைகளுள் சிறந்த சிறுதுறை, பெருந்துறை, தெய்வ வீமகசி என்ற முத்துறைகளில் சோழன் தனது போர் யானைகளை நீராட்டினுன் என்று வரலாறுகள் கூறுகின்றன. மூன்ருவது துறை "தெய்வ ஹிமாதி" (ஹேமாவதி) என்று இம்மெய்க்கீர்த்தி குறிப்பிடுவது அறியத்தக்கதொன்ருும்.

சளுக்கியரோடு இராசாதிராசன் அமரிட்டபோது, களத்தில் வாட்போர்புரிந்து தோற்ருேடிய விச்சையன் என்னும் வல்லவனுடைய தந்தை, தாய் இருவரையும் பூண்டூர் என்னும் இடத்தில் சிறைப்படுத்திய செய்தியினை மெய்க்கீர்த்திப்பகுதி தெளிவு செய்வதுடன்,

ஆகவமல்லனை வென்று நாடு திரும்பிய சோழன் தன்னைப் பணிந்தொழுகும் மன்னருடன் "செண்டாடுதல்" என்ற விளையாட்டயர்ந்து நின்ற சிறப்பினை. "தன்கழல் பணிந்தொழுகும் அரைசரொடும் செண்டாடி" என்ற பகுதி உணர்த்துகின்றது

தேவதான இறையிலிக் கல்வெட்டில், "சேரவான் நிலம்" வாதுசெய்வான் திருநந்தவனம். திருநாவுக்கரசின் திருநந்தவனம் என்பன குறிக்கப்பட்டுள்ளன, சேரமான் என்ற பெயரே சேரவான் என்று திரிந்த நிலையில் குறிக்கப்பட்டுள்ளது. இறைவனிடம் வெண்ணெய்நல்லூரில் வாது செய்தவர் சுந்தரர் ஆதலினல், வாது செய்வான் என்று சிறப்புப் பெயருடன் சுந்தரர் குறிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு தெய்வநலங்கண்டு வாழ்ந்த சைவநலப் பெரியோர்களின் பெயரால், சோழமன்னர் ஆட்சியில் நிலமும் நந்தவனங்களும் பெயரிடப்பெற்றுத் திகழ்ந்த மேன்மையினை இக் கல்வெட்டிலும் காணலாகும்.

சிலம்புச் செல்வம்

(பி சோ. பாண்டியன் அறிவுடைநம்பி,
அப்துல் ஹகீம் கல்லூரி, மேல்விசாரம்.)

1. முன்னுரை

"நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்ருன் பாரதி. அந் நூலைப் பயிலுங்கால் சில ஐயங்கள் எழுந்தன, அறிஞர்கள் சிலரையணுகியும் நெஞ்சம் அமைதியுறத்தக்க விடை கிட்டவில்லை. நல்ல அறிஞர்பால் சென்று நூல் முழுமையும் ஐயந்திரிபறக் கற்க இந்நாளில் விழைவோன் வறுமையும் சிறுமையுமே அடைவான். அரசும் பல்கலைக் கழகமும் எந்நூலையும் ஊறுகாய் போலத் தொட்டுச் சுவைக்கும்படியே பாடத் திட்டம் அமைக்கின்றன. அத் திட்டப்படி பயின்ற புலவர்களுக்கே தக்க ஊதியமும் ஆதரவும் கிட்டாதபோது முழு நூலுங் கற்க விழையும் என்போன்ருர் என்செய்வர்?

இந்நிலையில் என் ஐயங்களைத் நீக்கும் வாயிலாகத் "தமிழ்ப் பொழிலை"க் கருதி இதனை எழுதுகின்றேன். ஐயங்கள் பொருளின் உண்மை தோன்ருமையால் எழுவன. ஆதலின் இதனைக் கண்ணுறும் அறிஞர்கள் விரையாது வெகுளாது விரும்பி முகமலர்ந்து விடையருள்வார்களாக.

2. பூவந்த வுண்கண் பொறுக்க

பாசண்டச் சாத்தன் தேவந்தியாகிய தன் மனைவியின் விழிகள் தெய்வ வடிவு காணப் பொறுக்கும் ஆற்றல் பெருமையால்,

> "பூவந்த வுண்கண் பொறுக்கென்று மேனித்தன்
> மூவா விளநலங் காட்டியெங் கோட்டத்து
> நீவா வென வுரைத்து"

நீங்கினன் "தெய்வ யாக்கை யாதலாற் பொருதென்று பொறுப்பித்தானென்க" என்று அரும்பதவுரை யாசிரியரும், "மக்கள் கண்ணிற்குத் தெய்வ யாக்கை காணப்பொருதாகலின் இவள்கட்குப் பொறுக்கக் கடவதென்று நிருமித்துக்கொண்டான்" என்று அடியார்க்கு நல்லாரும் இதற்கு விளக்கந் தந்தனர்.

திருச்செங்குன்றத்து நெடுவேள் குன்றத்தில் அமரர்வந் தேத்திக் கோவலனைக் காட்டிக் கண்ணகியை விண்ணுலகங் கொண்டு சென்றனர். இதனை,

"வானவரு நெடுமாரி மலர்பொழிந்து
குன்றவருங் கண்டுநிற்பக் கொழுநனெடு
கொண்டு போயினர்"

என்று வரும் குன்றக் குரவை 8 — 9 அடிகளாலும்

"ஒருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடெங்
கட்புலங் காண விட்புலம் போய
திறம்பூது"

என்று வரும் பதிகத்து 5 — 9 அடிகளாலும் அறியலாம்.

ஊன் உண்ணு ஒழுக்கத்தாளும் தெய்வத்துக்கே மனைவியாயிருந்தவளும் ஆன தேவந்தியின் விழிகளே ஒரேவொரு தெய்வ வடிவைப் பார்க்கும் ஆற்றல் இல்லாதனவாயின். ஊனையே உணவாக்கொண்டு "நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சாராய்க் கடுமாப் பார்க்கும் கல்லாக்" குறவர் கண்கள் பல தெய்வ வடிவங் களையும் ஒருசேரப் பார்க்கும் ஆற்றல் பெற்றன என்பது எப்படி ஒவ்வும் ?

"பூவந்த வுண்கண் பொறுக்கென்று" என்ற தொடருக்கு மாற்றுப் பொருள் காண முற்படல் மதியுடைமையாகாது. பாரதம். திருமுருகாற்றுப்படை முதலிய நூல்களும் தெய்வ யாக்கையை மக்கள் கண்காணும் ஆற்றல் பெருதன என்று உரைக்கும்.

எனவே, குன்றக்குறவர் கண்டதாக இளங்கோவடிகளே புனைந்துரைத்தாரா?

3 விந்தைச் செய்திகள்

இந்திரவிழா ஊரெடுத்த காதையில் சோழ நாட்டின் சிறப்பாகக்,

காவற்பூதம், முத்துப்பந்தர், பட்டிமண்டபம்,
வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், கல்மன்றம்.
பூதச்சதுக்கம், பாவைமன்றம்

முதலிய வியப்பூட்டும் செய்திகளை யறியலாம். பட்டினப்பாலை முதலிய சங்க நூல்களிலோ, பின்னுள் நூல்களிலோ இவை பற்றிய குறிப்பு எட்டுணையேனும் இன்று.

இவ்வாறே மதுரையின் சிறப்பாகப் புண்ணிய சரவணம் பவகாரணி, இட்டசித்தி, பிலம் முதலியனவும் இளங்கோவடிகளால் கூறப்படுகின்றன. பிலம் பற்றிய செய்திக்கண், தொடிவளைத் தோளி யொருத்தி தோன்றி,

> "இம்மைக் கின்பமும் மறுமைக் கின்பமும்
> இம்மை மறுமை யிரண்டு மின்றியோர்
> செம்மையி னிற்பதும் செப்புமின்"

என வினுவுவாளாம். இதன் பொருள்,

> "இப்பிறப்பிற்கு இன்பமும் மறுபிறப்பிற்கு இன்பமும் இவையிரண்டும் ஒழிந்து எக்காலத்தும் ஒன்றுந் தன்மையாய்க் கோட்டமின்றி அழிவற நிற்கும் இன்பமுமாகிய பொருள்கள் யாவை? அவற்றை நீர் உரைமின்" (அடியார்க்கு நல்லார்)

என்பதாகும். இவளுக்கு விடை கூறி இவள் கதவந் திறந்து காட்டிய வழியிலே உள்ள இரட்டைக் கதவையுடைய வாயிலின் மேலாகச் சென்றால் வட்டிகையிலே எழுதின பாவைபோல்வாளொருத்தி வெளிப்பட்டு

> "இறுதியி லின்ப மெனக்கீங் குரைத்தால்
> பெறுதிர் போலுநீர் பேணிய பொருள்எனும்"

இதன் பொருள் :

> "ஈறில்லாத இன்பம் யாது? அதனை உரைத்தீராயின் நீயிர் இம்முப்பொருளினும் விரும்பிய பொருளைப் பெறுவீரென்னும்" (அடியார்க்கு நல்லார்)

தொடிவளைத் தோளியின் ஈற்று வினுவே பாவை போல்வாளின் வினுவுமாகும். இது வினுவழுவுவாம். தொடிவளைத் தோளிக்கு விடையின் சீர்மையை அளக்கத் தெரியாதென்று பாவைபோல்வாள் மீட்டும் அவ்வினுவை எழுப்புகின்றாளா? இவளுக்கு மட்டிலும் விடையின் தரமுணரும் ஆற்றல் உள்ளதென்பதற்கு என்ன சான்று?

இவ்விந்தைகளைப்பற்றியும் மதுரைக் காஞ்சி முதலிய சங்க நூற்களும் பிற்கால நூற்களும் உரைத்தில.

இவையும் இளங்கோவடிகளார் கற்பனை வன்மையைக் காட்டுவன போலும்.

4. சமணமா? பௌத்தமா?

கோவல கண்ணகியரைச் சிலம்பு சமணச் சார்புபடுத்தும் மேகலை பௌத்த மதச் சார்புபடுத்தும் கூறும் இவற்றில் வாய்மை யாது? இவர்கள் சமணராயினும் பௌத்தராயினும்

(1) மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்தல் தகுமா?

(2) மணிவண்ணன் கோட்டம் வலம் செய்தல் தகுமா?

(3) அந்தரி மந்திரம் ஓதுதல் தகுமா?

(4) வேட்டுவ வரியைக் கேட்டலும் பாடும் பாணரிற் புகுந்து கோவலன் பாய்கலைப் பாவை பாடற் பாணி வாசித்தலும் தகுமா?

(5) ஒரு மூன்றவித்தோன் ஓதிய ஞானத் திருமொழிக் கல்லது என் செவியகம் திறவாது என்ற கவுந்தியடிகள் வேட்டுவ வரி கேட்டிருத்தலும் பாய்கலைப் பாவை பாடற் பாணி கேட்டிருத்தலும் தகுமா?

5. மதுரைக் காவலன்

கோவலன் தன் கொடுவினை சூழக் கொலையுண்டானே யல்லாது பாண்டியன் கொடுங்கோலால் அன்று 'தென்னவன் தீதிலன்' என்ற கண்ணகியின் மொழியே இதற்குத் தகுசான்றும்.

கோவலன் கொலையுண்ட தவற்றுக்காக வருந்தி மதுரைக் காவலன் தேவியுடன் இறந்ததே தகு கழுவாயாம். கண்ணகி யின் சினம் இறந்துபட்டிருக்கவேண்டும். அவள் சினம் கரை யிறந்து செல்லலும் மதுரையை எரிக்கப் புகுதலும் நன்னெறியின் பாற்படுமா? நாடகக் கணிகையோடாடி ஆடகப் பொற்குவை யழித்து, மதிகெட்டு, பதிகெட்டு, விதியுங்கெட்டு மதுரைக்கு வா என்று மதுரை மாந்தர் கோவலனை வேண்டினரா? மன்னவன் தவறிழைப்ப மக்களைச் சீறுதல் மதியுடைமையாகுமா? மதுரை யைச் சுடுதல் மாளாத தீவினையை வளர்த்தல் ஆகும் அல்லவா? மதுரை தீப்பட்டது சாபத்தாலெனில், அது என்ன சாபம்? வெறுமனே சாபம் என்று அமைதி கூறிவிட்டால் போதுமா?

மதுரை தீப்பட்டதும் செப்பமுற்றதும் (சிலம்பு, மேகலை தவிர்த்து) வேறு எந்நூல் கூறுகின்றது? வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்ச்சியை எந்த முன்னூலும் பின்னூலும் கூறாமை என்ன? சிலப்பதிகாரம் கூறும் கிளைக் கதைகள் பலவற்றை

விரித்துக் கூறும் பெருநூலான திருவிளையாடற் புராணமும் இதைக் கூறவில்லையே. மாரியாலும் வாரியாலும் இடர்ப்பட்ட வரலாறு தெரிவிக்கும் அந்நூல் தீயால் இடர்ப்பட்டதை ஏன் கூறவில்லை?

பாண்டியனும் தேவியும் அறங்கருதி உயிர்விட்ட செயல் எத்துணை மாண்புடைத்து. இதனை ஏன் எப்புலவரும் சிறப்பித்துப் பாடவில்லை? பின்னுட் புலவருங் கூருமை என்னே? தொகை நூல்களிலும் இப்பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனுகவே கூறப்படுகின்ருனே யன்றி அரைசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியனுகக் கூறப்படாமை ஏன்?

பாண்டியனும் தேவியும் மாண்டதும் மதுரை தீவாய்ப்பட்டதும் இளங்கோவடிகளார் கற்பனையாற் சமைத்தவையா?

6. ஆயிரம் பொற்கொல்லர் கொலையா?

கண்ணகிக்குச் சாந்தி செய்யும் பொருட்டு வெற்றிவேற் செழியன் ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டான். இது,

"கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
பொற்ருெழிற் கொல்ல ரீரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்
கொருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி"

(நீர்ப்படைக் காதை)

என்பதனுலும் உரைபெறு கட்டுரையாலும் தெரிகிறது.

இஃதென்ன கொடுமை? ஆராயாது ஒரு கோவலனை — கள்ளனல்லாத கோவலனைக் கொன்றதற்கு வளையாத செங்கோல் வளைந்ததென்ருல், ஒரு பாவமுமறியாத ஒரு தீங்குமறியாத — ஆயிரம் பொற்கொல்லரைக் கொன்றதற்கு அச் செங்கோல் ஒடிந்து தூள் தூளாயிருக்கவேண்டுமே!

ஆயிரம் கொல்லரின் மனைவியரில் எத்தனையோபேர் கற்புடையவராயிருந்திருப்பர்! அவர்கள் சினந்தெழின் எத்தனை மதுரை தீவாய்ப்படவேண்டும்! சினந்தெழாது அடங்கி இறப்பினும் அவர்கள் வயிற்றெரிச்சல் தமிழ்நாட்டையே சூழ்ந்து கொள்ளுமே.

தெரியாது பட்ட சிறிய தீப்புண் ஆற கொதிக்கின்ற எண்ணெய்க் கொப்பறையில் இறங்கியவன் கதைபோலல்லவா இருக்கிறது.

இதுவும் கற்பனை போலும்.

7. வானகம் புக்கனரா ?

"உம்மை வினைவந் துருத்த காலை
செம்மை யிலோர்க்குச் செய்தவ முதவாது"

'கோவல கண்ணகியர் செம்மையிலோர்' என்று மதுராபுரித் தெய்வம் கண்ணகிக்கு உரைத்ததன்மூலம் அவர்கள் பண்பு உணரப்படும். இவர்கள் வானகம் புக்கதும் கற்பனை வளமா?

மாடல மறையோன் மொழியால் கோவலன் நற்பண்புகள் வெளிப்படுமேயெனில் அதையும் நோக்குவாமாக.

பிள்ளை நகுலம் பெரும் பிறிதாகும் கதை பள்ளிச் சிருர்க்குப் போதிக்கும் கற்பனைக் கதையாமே யல்லாது உண்மை நிகழ்ச்சி யாகாது. பிள்ளையில்லை என்று கீரிப்பிள்ளையை வளர்ப்பவன் அறிவுடைமை சந்தேகத்துக்கு உரியது, ஆகவே, இது கழிந்தது.

பூதம் புடைத்துண்ணும் நிகழ்ச்சியே சந்தேகத்துக்கு இட மாக உள்ளதால் கோவலன் பொய்க்கரி உரைத்தவனைக் காப்பாற்றச் சென்ற கதையும் வாய்மையாகாது.

மதம் பிடித்த யானையை அடக்குதற்கு வீரம் வேண்டும். காமம் மீதூர்ந்து காலங் கழித்த கோவலனிடம் யானையை அடக்கும் வன்மை எதிர்பார்ப்பது காளைமாட்டைக் கறக்க முயல்வதுபோல்தான்.

முற்பிறப்பிலோ கொலைசூழ்ந்த வன்னெஞ்சன். இப்பிறப் பிலோ காமங் கருதியே காலங் கழித்தவன். இந்நிலையில் இவனும், தன் தவற்றை எண்ணி வருந்துங் கணவன் மனம் புண்பட அவன் செயலை இடித்துக்காட்டுங் கண்ணகியும் வானகம் பெற்றதும் கற்பனையே போலும்.

8 முடிப்புரை

இன்னும் சில ஐயங்கள் உள அவற்றையெல்லாம் ஒரே கட்டுரையில் தர இயலவில்லை. அறிஞர்க்கும் விடை தருவதில் சிரமம் உண்டாகும். ஆதலால் இத்துடன் நிறுத்திக் கொண்டேன்.

ஒவ்வொரு ஐயத்தையும் தனித்தனியே குறிப்பிட்டு தெளி விக்கும்படி அறிஞர்களைத் தலைவணங்கிக் கேட்டுக்கொள்ளு கின்றேன்,

ஆசிரியர் நல்லந்துவனார்

த இராமநாத பிள்ளை, B A,
யாழ்ப்பாணம்.

புலவர் நல்லந்துவனார் சான்றோரால் ஆசிரியர் எனச் சிறப்பிக்கப்பட்டு வருதலாலும் அவர் பெயர் நல்ல என்னும் அடை பெறுதலாலும் அந்துவனார் நுண்மாண் நுழைபுல மிக்க நல்லறிஞராவர்.

சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற்
சீர்மிகு முருகன் தண்பரங் குன்றத்
தந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை. —அகம் 53

இவ்வகப்பாட்டடிகளால் திருப்பரங்குன்று அந்துவனாரால் அழகாக வருணிக்கப்பட்டதென மருதனிளநாகனார் கூறிப் போந்தனர். மருதனிளநாகனார் ஊடலையும் ஊடல் நிமித்தத்தையும் நகைச்சுவை மிளிரப் பாடுதலில் வல்லவர் என்பது அவர் இயம்பிய மருதக்கலி ஒன்றால் இனிது புலப்படும். குறளனும் கூனியும் ஊடிக் கூடுதலை விளம்பும் கவியினைச் சுவைக்காதார் இல்லை. இது நிற்க, செவ்வேளுக்கு வாழ்த்துக் கூறும் பரிபாடல் ஒன்றின்கண் நல்லந்துவனார் திருப்பரங்குன்றை இனிது வருணித்துள்ளார். திருப்பரங்குன்றை வருணிக்குமிடத்து ஒரு தலைவனும் ஒரு தலைவியும் ஊடுதலும் இன்பச் சுவை ததும்பச் சித்தரிக்கப்பட்டுளது. இங்ஙனம் ஊடலை வருணித்தமையால், ஊடல் பாடுதலில் வல்ல மருதனிளநாகனார் நல்லந்துவனாரின் பரிபாடலை நனிமெச்சினர்

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப் பத்தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோடு அகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை.

எட்டுத்தொகை நூல்கள் யாவை என்பதை இப்பழைய வெண்பாக் கூறுநிற்கும். எட்டுத்தொகையுள் ஒன்று கலித்தொகை. கலித்தொகையிலுள்ள நெய்தற்கலியை நல்லந்துவனார் பாடினார் என்பது கீழே தரப்படும் வெண்பாவால் தெரிகிறது.

பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
மருதனிள நாகன் மருதம் — அருஞ்சோழன்
நல்லுருத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.

'கற்றறிந்தோர் ஏத்துங் கலி' எனவும் 'கல்விவல்லார் கண்ட கலி' எனவும் கலிப்பாடல்களைச் சான்றோர் இருவர் கூறுதலால் கலிப்பாடல்களின் இனிமை இனிது புலப்படும். இங்ஙனம் பாராட்டப்படும் கலித்தொகைக்குக் கடவுள் வாழ்த்து இயம்பியோர் நல்லந்துவனாரே இக் கடவுள் வாழ்த்துள் அழகர் திரிபுர தகனம் செய்து கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்னும் மூன்று கூத்தையும் ஆடியதை ஒத்தாழிசைகள் மூன்றால் இனிது வருணித்துள்ளார் நல்லந்துவனார். கலிப்பாடல்களைத் தொகுத்தோர் நல்லந்துவனார் எனத் துணியப்படும். உள்ளத்தை உருகச்செய்யும் கலிப்பாக்களைப் பாடியோர் பெரும் புலவராதல் வேண்டும் என்பது ஒருதலை. புலவன் ஒருவனே புலவரின் புலமையை மதிக்கும் வல்லமை உடையவனாவன். புலமைமிக்க புலவன் ஒருவன் தன் புலமையால் கண்ட ஓர் அழகையோ உண்மையையோ நற்பண்பையோ தன் பாடலின் கண் செஞ்சொல்லால் இசைப்பன். நல்ல பாட்டுக்களைச் சுவைக்கும் புலவன் அவற்றினை உணரும் ஆற்றல் உடையவனாகத் திகழ்வன் என்பதில் என்ன ஐயம்? இங்ஙனம் நல்லந்துவனார் புலமை மிக்க புலவராகத் துலங்கியமையால் அன்றோ சிறந்த கலிப்பாக்களைத் தொகுத்துத் தந்தனர்

கலித்தொகையின்கண் இடம்பெறும் நெய்தற்கலிகள் நல்லந்துவனாரால் இசைக்கப்பட்டவை. தம்முடைய கலிப்பாக்களும் ஏனையோருடைய கலிப்பாக்களுக்கு ஒப்பாகுமென உணர்ந்தே அந்துவனார் தம் நெய்தற் கலிகளைக் கலித்தொகையுள் சேர்த்துள்ளார் நெய்தற்கலிகள் தற்புகழை விரும்பும் ஒருவரால் தொகையுள் சேர்க்கப்பட்டன அல்ல என்பது நெய்தற்கலி கற்போர்க்கு அங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகும். நெய்தற்கலிகள் ஏனைய கலிகளிலும் சுவை மிகுந்தவை என்பது மிகையாகாது. உள்ளம் உருகும் வண்ணம் அவலச் சுவையை வருணிப்பதில் நல்லந்துவனார் ஒப்பாரும் மிக்காருமின்றி மிளிர்கின்றனர் எனலாம்.

மடலேறுவோனின் வருணனையைக் கற்போர் அதனைச் சுவைத்து மடலேறுந் தலைவன்மீது இரங்குவர் அன்றோ! தலைவன் தன்னைத் துறந்தான் எனக் கவலும் தலைவியின் துன்பத்தை உளம் கசியச் சித்திரித்துக் காட்டுதலால் நல்லந்துவனார் மாபெரும் புலவராகின்றார் தலைவி படுந் துன்பத்தைக் கண்டு இரங்குவோர் தலைவியின் துயரைத் தாம் களையவேண்டுமென எண்ணுவர். குறிக்கப்பட்ட இடங்களில் தன்னை முயங்கிய காதலன் தன்னைத் துறந்தானே எனத் தெருமருந் தலைவியின்

உரைக்கவொணுத் துயரைக்கண்டு கற்றறிந்தசான்ருேர் இரங்கா நிற்பர். தன் காந்தனைக் காட்டித் தரும்படி தலைவி திங்களின் கண் உள்ள முயலை இரத்தல் என்பதும் காட்டித்தராவிட்டால் கதநாய் கொளுவுவேன் என்பதும் முயல் ஒளிக்கும் இடத்தை வேடுவனுக்குக் காட்டிக்கொடுப்பேன் என்பதும் முயலுக்குப் புகலிடமாகிய மதிமீது அரவைத் தூண்டுவேன் என்பதும் சுவைத்து இன்புறுதற்கு உரியன. அவ்வருணனைகள் தலைவி யின் கழிபெருங் காதலைப் படம் பிடித்துக் காட்டுவன. இங்ஙனம் தலைவி சித்தங் கலங்கி அலமருதலைக் கீழே தரப்படும் அடிகளில் காண்க.

பொங்கிரு முந்நீ ரகமெல்லா நோக்கினை
திங்களுட் டோன்றி யிருந்த குறுமுயால்
எங்கேள் இதனகத் துள்வழிக் காட்டீமோ?
காட்டா யாயிற் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவர் உள்வழிச் செப்புவே னட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
வென்னல்ல நீரா யெனின்.

தலைவியே தன் துயரை மதிதிரிந்த வென்னலல்லல் என்பது அழகியது. மேலும், இத்தலைவி 'ஓஒ கடலே' என ஊரைச் சூழ்ந்துள்ள கடலை விளித்துக் காதலனைத் தரும்படி இரத்தலும் தன்னுடைய காமத்தீதான் குளிர்ந்த கடலுள் ஒளிப்பினும் தன்னைச் சுடுமெனப் பிதற்றலும் மனதைக் கவரும்.

இனிப் புலவர்களுள் சிறந்த புலவராகத் திகழும் நல்லந் துவனுர் திருக்குறளின் மாண்பைச் செஞ்சொல்லால் நவில்தலைக் காண்க.

சாற்றிய பல்கலையுந் தப்பா அருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந் - தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பார்
எப்பாவ லரினு மில்.

திருவள்ளுவ நாயனுர் உலகத்துத் தோன்றிய புலவர்கள் எல்லாரிலும் சிறந்த முதற்பாவலர் ஆவார் எனத் துணியும் ஆற்றல் நல்லந்துவனுர்க்கன்றி வேறு யாவர்மாட்டு உளதாகும். திருவள்ளுவரைத் தேர்ந்து போற்றும் கழகங்களும் இளங்கோ வடிகளை ஆய்ந்து இன்புறுங் கழகங்களும் கம்பரைச் சுவைக்கும் கழகங்களும் பல உளவாதல்போல் நல்லந்துவனுரின் நலத்தை நனிபாராட்டுதற்குச் செந்தமிழ்க்கழகங்கள் தோன்றவேண்டும். என்னே! அவலச் சுவையை வருணிப்பதில் நல்லந்துவனுரோ சேக்ஸ்பியரோ நனிசிறந்தவர் என்பதை யாம் சிந்திக்கக் கடவேம்.

கவிஞர் பாரதிதாசனின் கடவுட் கொள்கை

ஒ. ஆரோக்கியநாதன், எம். ஏ.,
மைசூர் – 6.

இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞர்களுள் பாரதிதாசனும் ஒருவராவர். இயற்கையின் ஈடிலா அழகினை நயம்படக் கவிதையில் வடித்துத் தருவதில் தன் நிகரின்றித் தனித்து உயர்ந்து நின்ற தமிழ்க் கவிஞன் பாரதிதாசன். பாரதிதாசனின் இயற்கை பற்றிய பாடல்கள், ஆங்கிலக் கவிஞர்களான ஷெல்லி. வோர்ட்ஸ் வொர்த், கீட்ஸ் ஆகியவர்களின் கவிதைகளோடு ஒப்பிட்டு நோக்கும் சிறப்புவாய்ந்தனவாகும். இயற்கையின் பேரழகால் ஈர்க்கப்பட்டு வாழ்ந்த பாரதிதாசன் தன்னுடைய துவக்கக் காலங்களில் சுப்ரமணிய துதியமுது எழுதினவர் என்ருலும், பின்னர்ப் பகுத்தறிவுவாதியாக மாறினுர் நாத்திகராக மாறிய பாரதிதாசனின் இந்த தீவிர வாதக் கொள்கையால்தான் புரட்சிமிகு உணர்ச்சிப் பாடல்களை அவரால் உருவாக்க முடிந்தது என்று கூறிக் கவிஞர் பாரதிதாசனை ஒரு சிறிய வட்டத்திற்குள்ளே கொண்டுவந்திடப் பார்க்கிருர்கள், ஒரு சிலர். அதனுல், சிலர், கடவுட் கொள்கையிலாப் பாரதிதாசனின் பாடல்களைப் படித்திட மிரளுகின்ற அவலநிலை தமிழகத்தில் நிலவி வருகிறது. கவிஞர் பாரதிதாசனின் கடவுட் கொள்கை என்ன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். எந்த ஒரு தமிழ்க் கவிஞனுக்கும் எந்த ஒரு காலத்திலும் இல்லாத வகையில் தமிழ்மொழிமீது பாரதிதாசனுக்கு அளவு கடந்த பற்று இருந்து வந்தது. அந்த பற்று சிற்சில நேரங்களிலே வெறியாகவும் உருவெடுத்து நின்றது, கவிஞனுக்குத் தமிழைத் தன் உயிராகவும் தமிழ் மொழியின் ஆதிக்கத்திற்குக் கேடு விளைவிப்பவன் எவனுக இருந்தாலும் அவனைத் தன் பெற்ற தாயே தடுத்தாலும் விடாது எதிர்க்கின்ற வேகமும் இருந்தது, இதனைப் பாரதிதாசனின் பாடல்கள் பலவற்றில் நாம் காணமுடிகிறது.

சான்ருக :

"தமிழுக்கு அமுதென்று பேர் — அந்தத் தமிழுக்கு
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
(பாரதிதாசன் கவிதைகள் : இன்பத் தமிழ்)

"எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்

தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராக் கொள்வீர்.'' (தமிழியக்கம்: மாணவர்.)
''அறமென்று கொள்ளடா செந்தமிழ் பணியை
அமுதென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை''
(தமிழியக்கம்)

பாரதிதாசனுக்குத் தமிழ் மொழியின்மீது மட்டும்: அளவு கடந்த ஈடுபாடு இருந்திடவில்லை, தமிழர்களின் தமிழ் இனத்தின் முன்னேற்றத்திலும் பெரும் அக்கறை காட்டினர். தமிழ் இனத்தின் முன்னேற்றத்தில்தான் தமிழ் மொழியின் முன்னேற்றமே அமைந்துள்ளது என்பது அவரது ஆய்ந்த முடிபாகும். கவிஞரின் காலத்தில் ஆட்சிமுறை மொழியாகத் தமிழ் இல்லாது ஆங்கிலமும், ஓரளவு இந்தியும் இருந்துவந்தது. இவ்வாறு பிற மொழிகளின் ஆதிக்கம் ஏற்படுமானல் தமிழ் மொழியின் வளர்ச்சி தடைப்பட்டுவிடும் எனக் கவிஞன் கருதினன்,

''ஆங்கிலச் சொல் இந்தி மொழி
வடசொல் யாவும்
இவண் தமிழிற் கலப்பதுண்டோ''
'வடமொழியும் பிழைத் தமிழும்
பெருகி விட்டால்
வருநாளில் தமிழழியும்
வடமொழியே மேலோங்கும்''
''தாய்ப்பாலில் நஞ்செனவே
தமிழில் வடமொழி சேர்த்தார்
தவிர்த்தல் வேண்டும்''

எனப் பிறமொழியின் ஆதிக்கங்களை வன்மையாகச் சாடுகிறர். பிற மொழிகளின் ஆதிக்கங்கள் ஏற்படுமானல், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான சொற்பெருக்கில் தடை ஏற்பட்டுவிடும் என்பதே அவரது கருத்து.

''உலகுக்குத் தமிழ் மொழியின்
உயர்வினைக் காட்டுவது
சொற் பெருக்கம்''

ஆனல், ஆங்கிலத்தினைப் படிப்பது நம்முடைய அறிவு வளர்ச்சிக்கு உதவும் என்றும், பிறமொழி சாத்திரங்களை தமிழில் கொணர்தலுக்கு ஆங்கில அறிவு உறுதுணையாகும் என்றும், அலுவல் பார்க்க ஆங்கில அறிவு தேவையென்றும் கருதினர்.

"அழகிய தமிழ் நடையாற் புதியன்வாய்
ஆயிரம் கலை நூல் சேர்ப்போம்"
"ஆங்கில நூல் அறிவுக்குச்
சான்றிருந்தால் அதுபோதும்
அலுவல் பார்க்க"

ஆங்கிலம் கற்பதை ஓரளவு எதிர்க்காது ஆதரித்த கவிஞர், வடமொழியின் ஆதிக்கத்தை அறவே எதிர்த்தார். வடமொழியின் சேர்க்கையால் எந்தவிதப் பயனுமில்லை எனக் கருதினர். சாதிப் பாகுபாடு முதலியன வடமொழியால் — வடமொழியினரால் நம்மவரிடை புகுத்தப்பட்டது என்பதால்,

"நால் வகுப் பென்பது நூல் வகுப்பா தமிழ் நாட்டில்
நற்றமிழர் ஓரே வகுப்பே தமிழ் ஏட்டில்"
"ஏட்டினில் உள்ளதுவோ — தமிழர்
இனத்தில் வேற்றுமைதான்"

என்று கூறி, சாதி என்பது தமிழ் மக்களுக்கு இடையில் வந்த ஒன்று என்றும்,

"மிக்குயர்ந்த சாதி கீழ்ச்சாதி எனல்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க்கில்லை,
பொய்க் கூற்றே சாதி எனல் ஆரியச் சொல்
புது நஞ்சு; பொன்விலங்கு; பகையின் ஈட்டி"

என்று சாதிக்கு எதிராக முழக்கம் செய்தார். இவ்வாறு ஆரிய மொழிக் கலப்பால் சாதிக் கொடுமைகள் தமிழகத்தில் பரவிவிட்டதாகக் கருதியதாலும், ஆலயங்களில் தமிழ் அல்லாது ஆரிய மொழி மட்டுமே பயன்படுத்தப்படுவதாலும் கவிஞரின் ஆரிய மொழி எதிர்ப்பு மிகத் தீவிரமாக அவரது கவிதைகளில் மிளிர்வதைக் காணலாம் ஆலயங்களில் ஆரிய மொழி மட்டுமே பயன்படுத்தப்பட்டதை கவிஞர் தமிழ்ச் சொற்களால் சுடு கணைகள் அமைத்து, தம் கவிதைகளில் எதிர்த்திருக்கிறார். ஆரிய மொழியினை உச்சரிக்கின்றவர்களை, இறைவன் உலாவரும் தேரில் அமரவைப்பது ஆரிய மொழிக்கு உயர்வு தருவதாகும் என்று கருதியே

"எல்லோரும் கயிறிழுக்க
இயங்குமொரு தேர்மீதில்
ஆரியத்தைச்
சொல்லிடுமோர் சொறிபிடித்த
பார்ப்பானை குந்தவைத்தல்
தூய்மைதானோ" என வினவுகிறார்.

போற்றுதற்குரிய பொதுவாக ஆலயத்தை பாரதி தாசன் கருதினுர் என்ருலும், அங்கே உயிரினும் இனிய தமிழ் மொழியின் நீக்கத்தையும், ஆரிய மொழியின் ஆதிக்கம் இருப்பதையும் கவிஞரால் எதிர்க்காமல் இருக்கமுடியவில்லை.

"மேற்படுத்தும் எவற்றினுக்கும்
மேற்பட்ட தன் மொழியைத்
தமிழைத் தீயோர்
போற்றுவதற் குரியதொரு
பொதுவினின்று நீக்கிவைத்தார்
பொறுப்ப துண்டோ"
"வேற்றவரின் வடமொழியை
வேரறுப்பீர் கோயிலில்லை
மேவி டாமே"

தமிழ் இனத்தவர்க்குச் சாதியினை ஏற்படுத்தி, கோவில்களில் தமிழ் நுழையாதபடி ஆக்கி, தமிழர்களில் ஒரு பிரிவினரை கோவிலுக்குள் அனுமதிக்காத அவலநிலைக்குத் தமிழ்க் கவிஞனுல் கண்டனக் குரல் எழுப்பாது இருக்கமுடியவில்லை

"ஏகப் பரம்பொருள் என்பதை நோக்க
எல்லோரும் உடன் பிறப்பே".

என்று கூறிய கவிஞர்,

"குக்கலும் காகமும் கோயிலிற் போவதில்
கொஞ்சமும் தீட்டில்லையோ"

என வாதிட்டுத் தமிழ் மக்கள் ஆரியரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு நாயினும் கேவலமாகிக் கோயிலில் நுழையமுடியாத நிலை அப்போது இருந்தது. அந்நிலை மாறத்தான் கவிஞரது ஆரிய மொழி எதிர்ப்பு வாதம் பல துறைகளில் வாளெனச் சுழன்று வருவதைக் காணலாம் இவ்வாறு விளைந்த நம் கவிஞரின் எதிர்ப்புச் சுழற்சியினை மேலாக நோக்கினுல் பாரதிதாசனுக்குக் கடவுட் கொள்கை இல்லை எனத் தவருகக் கணித்திட வழியுண்டு, கவிஞர் தன் கவிதைகளில் கடவுள் உண்டு என்பதைப் பல இடங்களில், தன்னை பகுத்தறிவு வாதத்திற்கு ஆட்படுத்திக் கொண்டதற்குப் பின்னுலும் கூறிச் செல்வதைக் காணலாம்.

"ஒன்றே அல்லால் குலமில்லை
ஒருவனே அல்லால் தெய்வமில்லை"
(தாயின்மேல் ஆணை)

என்றும்,

"ஒருகடவுள் உண்டென்போம்
உருவணக்கம் ஒப்போம்
உள்ளபல சண்டையெலாம்
ஒழியும் மதமொழிந்தால்" (கடற்மேற் குமிழ்கள்)

என்றும்,

தான் எழுதிய ஏற்றப் பாட்டில்,

ஓர் கடவுள் உண்டு — தம்பி
உண்மை கண்ட நாட்டில்
பேரும் அதற் கில்லை — தம்பி
பெண்டும் அதற் கில்லை
தேரும் அதற் கில்லை — தம்பி
சேயும் அதற் கில்லை
ஆரும் அதன் மக்கள் — அது
அத்தனைக்கும் வித்து
உள்ள தொரு தெய்வம் — அதுக்
குருவமில்லை தம்பி

எனப் பாடி, கவிஞர் தன்னுடைய கடவுட் கொள்கையினை மிகத் தெளிவாகக் காட்டுகிருர். பாரதிதாசனின், எதிர்பாராத முத்தம் எனும் நூலில் அவரது ஆத்திகக் கொள்கைக்குச் சான்று பல உள்ளன. அந் நூலிலுள்ள கதாபாத்திரங்கள் அனைத்தும் தெய்வ நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். கதாநாயகனை பொன்முடி வடக்கு தேசம் சென்றதும் அங்கே ஒருசிலர் பொன்முடியிடம் யாகத்திற்கு பொன் கேட்க, அதற்கு,

"தென்னாட்டார் தமிழர் சைவர்
சீவனை வதைப்பதான
இன்னல்சேர் யாகந்தன்னை
யாம் நம்ப மாட்டோம்"

எனக் கூறுவதாக அமைந்த பாடலில், தமிழர்களின் சைவக் கொள்கையினைக் காட்டுகிருர் கவிஞர். மேலும், பொன்முடியினைப்பற்றி கூறும்போது,

அன்பே சிவனென்று அறிந்தோன், அறியார்க்குத்
தின்புலால் யாகச் சிறுமைதனை நன்றுரைத்தான்

எனக் கூறி, பொன்முடியின் வாயிலாகக் கவிஞன், அன்பே தெய்வமெனும் தனது கடவுட் கொள்கையினை வெளிப்படுத்து கிறார்.

"சைவநெறி ஒன்றே வடக்கு சனங்கட்கு ஓர்
உய்வளிப்பதாகும் உணர்ந்திடுவீர்"

என்று சொல்லியும், சைவ நெறியின் அருமை பெருமைகளை எதிர்பாராத முத்தத்தில் கவிஞர் பேசுகிறார், கடவுள் இல்லை யெனும் கொள்கையுடையவராக பாரதிதாசன் இருந்திருப்பாரே யானால், இவ்வாறு தான் படைத்த காவியத்திலும், தன்னுடைய கவிதைகளிலும், "ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" எனும் ஒப்புயர்விலாத் தமிழ்க் கொள்கையினைக் காட்டியிருக்கமாட்டார். தான் விரும்பாத ஒன்றினை கவிதைக்காக மட்டும் பாடி தன் சுயக் கொள்கையினை விட்டுத் தரும் மனப் பாங்கு உயர்ந்த கவிஞர்களின் வரிசையில் நிற்கும் பாரதிதாசனுக்கு இல்லை யென்பது திண்ணம். மேலும், எதிர்பாராத முத்தம் என்ற நூலிலே கதாநாயகி பூங்கோதை கனவு காண்பதாக ஒரு காட்சியினைச் சொல்லி, அக்கனவு நிகழ்ச்சி, காமாட்சி கோயிலில் நடப்பதாக காட்டுவதும் கவிஞரின் கடவுட் கொள்கைக்குச் சான்றாகும்.

தமிழ் மொழியினையே தன் உயிராகக் கருதி, அதற்கு எதிர்ப்பும், அழிவும் எத்திசையிலிருந்தும், எவரிடமிருந்து வந்தாலும் அதனை எந்த நிலைக்குச் சென்றாவது எதிர்த்து தகர்த்திட வேண்டுமென்பதுதான். தமிழ் மொழியின்பால் கவிஞர் கொண்டிருந்த தணியாத பற்றின் காரணமாக அவ ரின் உயிர் மூச்சாக இருந்தது, அதனால்தான் புனிதமான போற்றுதற்குரிய கோவிலில் இறைவன் பெயரால் நடந்திடும் ஆரிய மொழி ஆதிக்கத்தையும், சாதிக் கொடுமைகளையும், கோவிலில் நுழைந்திடும் உரிமையில் இருந்திட்ட தடைகளையும், எதிர்த்திடத் துணிந்தார். ஆனால், இச்செயல்கள் அனைத்தும் நல்ல பகுத்தறிவு மிகுந்த ஆத்திக மனங்கொண்ட சான்றோர் களின் நியாயமான செய்கைகளாகுமே யொழிய கடவுள் இல்லையென கூறுகின்ற நாத்திகவாதிகளுக்கு மட்டுமே சொந்த மல்ல. பாரதிதாசன், தன் காலத்தில் இருந்த பிற்போக்குக் கொள்கைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் கண்டித்திருக் கிறார். தமிழுக்கு ஊறு விளைக்கிறதே ஆரிய மொழி ஆதிக்கம் எனபதால் மட்டுமே கோயில்களைச் சாடினாரே யொழிய, கடவுள் இல்லை என்பது அவரது உறுதியான கொள்கை இல்லை. அதற் காக அவர் தன்னுடைய கவிதைகளில் நின்றிடவுமில்லை.

காட்சியும் கற்பனையும்

டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பி. எச். டி.,
(அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.)

குறுந்தொகைப் பாட்டு

இரவிலே வந்து தலைவியைச் சந்தித்து இன்புற்று மகிழ எண்ணினான் தலைவன்: அவனைத் தலைவியின் ஆருயிர்த் தோழி கண்டு, அவ்வாறு இரவிலே வருதலால் விளையும் துன்பங்களை விளக்குகின்றாள். "நீ இரவில் வருவாய் ஆயின் நினக்கு ஏதேனும் தீங்கு உண்டாகுமோ என்று எண்ணி யானும் என் தோழியும் வருந்துவோம்; ஆதலின் நீ இரவிலே வருதலைத் தவிர்க்கவேண்டும்" என்கின்றாள். அவள் இந்த அடிப்படையில் கடுந்தோட் கர'வீரன்' என்ற சங்கக் கவிஞர் பாடிய பாட்டுக் குறுந்தொகையிற் காணப்படுகின்றது; அதன் கண் இக்கருத்தை விளக்குதற்குத் துணையாக மற்றுமொரு விழுமிய செய்தியும் கூறப்பட்டுள்ளது. அப்பாட்டின் அழகிய முழுவடிவம் பின்வருமாறு:

"கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரனுட நடுநாள்.
வாரல் வாழியோ வருந்துதும் யாமே" (69)

பொருட் சிறப்பு

கரிய கண்ணையும் தாவுதலையும் உடைய ஆண் குரங்கு இறந்துவிட்டது; கைம்மைத் துன்பத்தைப் போக்கமாட்டாத விருப்பத்தை உடைய பெண் குரங்கு என்ன செய்ததாம், மர மேறுதல் முதலிய தம் இனத் தொழிலை இன்னும் சரிவரக் கற்றுக்கொள்ளாத வலிய குட்டியைத் தன்னுடைய சுற்றத்தினிடம் கையடைப் பொருளாக ஒப்படைத்துவிட்டு, தன்னுடைய துணை பிரிந்த துன்பம் தாங்காமல், மலையின் உச்சிப் பக்கத்துக்குச் சென்றதாம். ஓங்கிய மலைப் பக்கத்தில் தாவி உயிரை மாய்த்துக்கொண்டதாம். "அத்தகைய மலைச்சாரலை உடைய நாட்டிற்குத் தலைவனே" என்று விளித்தாள் தோழி. விளித்த பிறகு, "அவ்வாறு நீ இரவிலே வந்தால் நினக்குத் தீங்கு

உண்டாம் என்று கருதி யாம் வருந்துவோம். ஆதலின் நீ நள்ளிரவில் வாரற்க; நீ தீங்கின்றி வாழ்தலையே யாம் வேண்டுவோம்'' என்று கூறி முடிக்கின்ருள்.

"சாரல் நாட! வாரல்!'' என்று கூறி, நிறுத்திவிடாமல், ''வருந்துதும் யாமே'' எனக் கூறி, மேலும், ''வாழியோ'' என்று தொடர்ந்து முடித்தல் கருதக் கருத இன்பம் விளைக்கின்றது.

''வாரல் வாழியோ வருந்துதும் யாமே'' என்ற இறுதி வரி உணர்ச்சிப் பிழம்பாக நின்று, நெஞ்சத்தின் குமுறலை இனிது எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

பெண் விலங்கு இனங்களும், தம் துணைக்குத் துன்பம் நேர்ந்த பொழுதில், உயிர் தரித்து வாழமாட்டா என்ற இயல்பை நின்னுட்டில் நீ அறிந்திருத்தலால், நினக்குத் துன்பம் வருமாயின் நின்னுயிர்த் துணைவியாகிய இவளும் உயிர் தரித்து வாழமாட்டாள் என்று அறிவாயாக என்று குறிப்பாக உணர்த்திவிடுகின்ருள் தோழி. மறைபொருளாக — நுட்பமாக — எண்ணிய எண்ணத்தைத் தோழி வெளிப்படுத்திவிடும் திறன் கவித்திறனேடு விளங்குகின்றது

கற்பனைத் திறன்

கணவன் இறந்த பிறகு உயிர்தாங்கி மண்ணுலகில் வாழாத தலைக் கற்புடைமை அஃறிணை உயிரினங்களுக்கும் உண்டு என்கின்றது கடுந்தோட் கரவீரர் கற்பனை. மரமேறுதல் முதலியவற்றைக் கல்லாத மிக்க இளமையையுடைய குட்டிக்காக வாழ வேண்டும் என்ற நினைவின்றித் தன்னுயிரைத் தன்னுயிர்த் துணையோடு சேர்க்க நினைக்கும் மந்தியின் மாண்பு மிக்க காதல் உணர்வினை எடுத்துரைத்த கற்பனை எண்ணுந்தோறும் இன்பம் ஊட்டுகின்றது 'இறப்பு' பெரும்பிறிது என்ற சொல்லமைப்பாற் சுட்டப்படுவது சங்கநூல் வழக்கு என்பது அறிஞர் கண்டதே ஆகும் (குறுந். 302; நற். 219; மணி 23 - 28) மந்தி தன் பெரும்பிறிது உற்றதும் கைம்மைத் துன்பம் பொறுக்காது. உயிர் போக்க நினைந்தமைக்குக் காரணம், அது நெஞ்சிற் கொண்ட தூய காதலே என்பதனைக் கவிஞன் 'காமர்' என்ற சிறு அடை கொடுத்து விளக்கிவிடுகின்ருன். காமர் என்பது 'விருப்பம்' என்ற பொருளினது ஆயினும், இங்கு அது கனிந்த காதல் உணர்வை - இனிது விளக்குவதாக அமைந்துள்ளது.

தன் குட்டியை அப்படியே விட்டுவிட்டுந் தான் மாய்த்துக் கொள்ளாமல்- அம்மந்தி அதனைத் தன்னுடைய சுற்றத்தினிடம் ஒப்படைத்து அதன் எதிர்கால வாழ்விற்கு அரண் ஒன்று அமைத்துவிட்ட பிறகே உயிர் நீக்கும் முயற்சி தலைப்பட்டது என்று கூறியிருப்பது நினைக்கத்தக்கது. 'காதலா பாசமா' என்ற உணர்வுப் போராட்டத்தை மந்தியின் மனத்தில் எழுப்பிக் காதலே வென்றதாகக் காட்டி, நெஞ்சப் பாசத்திற்கும் ஒரு விழுமிய செயலைக் காட்டும் நிலை கவிதையிற் காணப்படுகின்றது. தன் கடமையை முடித்த பிறகே உயிர்த்துணையை உயிர்கொண்டு நாடும் மந்தியின் நிலை பாட்டிற் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு ஆறறிவான் மிக்க மாந்தர் மாட்டுக் காணப்பெறும் நல்லியல்புகளையெல்லாம் தொகுத்து அஃறிணை உயிர்மாட்டு நிகழ்ந்தனவாகச் சுட்டுதல் பொருந்துமோ என்ற கேள்வியும் சிலர்க்கு எழக்கூடும். புலவர்கள் இவ்வாறு படைக்கும் கற்பனைகள் 'படைப்புக் கற்பனை' (creative imagination) என்ற வகையைச் சாரும். 'இவ்வாறு நிகழ வேண்டும்; நிகழ்ந்தால் நல்லது' என்று கவிஞன் சிலநேரங்களில் நினைக்கும் நினைவுகளை - விரும்பும் விருப்பங்களை - இவ்வாறு கற்பனைப் படத்தில் எழுதிக் காட்டிவிடுவதுண்டு. இது எம் மொழிக் கவிஞர்களிடமும் காணப்பெறும் பொதுவியல்பே ஆகும்

கற்பனைத் தூண்டுதல்

சங்க காலத்தே ஓருயிரும் ஈருடலுமாக வாழ்ந்த தலைவன் தலைவியர் அன்புநெறி கவிஞனை இவ்வாறு கற்பனை செய்யத் தூண்டிற்று எனலாம். குழந்தை பிறந்த பின்னரும் கூடக் கணவன் மனைவியரிடை நேயம் சிறிதும் குறைவுபட்டதன்று என்ற அக்கால நிலையே கவிஞனை இத்தகு படைப்பாற்றலில் ஈடுபடச் செய்திருக்கக் கூடும் என்று கூறலாம். இதற்கு மாறாகத் தம்முடைய குழந்தைகட்காக - அவர்களது எதிர்கால நல்வாழ் விற்காக ஒரு தாய் தன் தலைவனை நீத்த பிறகு உயிர்வாழக்கூடிய நிலையும் அக்காலத்தில் இல்லை என்று சொல்லமுடியாது. அத் தகைய நிலையை ஒட்டியும் அக்காலப் புலவன் உள்ளம் கற்பனை செய்யாமல் இல்லை.

பிறிதொரு நிலை

ஆண்மான் ஒன்று இறந்துவிட்டதாம். தன் சிறு கன்று ஒன்றுடன் தனித்து நிற்கிறதாம் பெண்மான்; துள்ளி ஓடும் நடை தளர்நடையாக மாறி நிற்கிறதாம் அது. பூனைகள் அடர்ந்து கிடக்கும் அஞ்சத்தக்க திறந்த வெளி. வறண்ட

நிலைப் பகுதி; ஆட்கள் நடமாட்டம் இல்லாத காட்டகத்தே அந்தக் கன்றுடன் நின்று அங்கே முளைத்துக் கிடக்கும் வேளைக் கீரையைப் பற்களால் கறித்து நிற்கின்றதாம் மான். கணவனை இழந்த பிறகு கைம்மை நோன்பு நோற்று வேளைக் கீரையை உண்டு உயிர்தரிக்கும் பெண்களைக் காட்சியிற் கண்டு, அவரை நினைந்து பாடப்பட்ட கற்பனையாகலாம். இது புறநானூற்றில் கல்லாடனுர் பாடும் பாட்டில் இதனைக் காணலாம்:

"அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளில் அத்த மாகிய நாடே" (23)

கணவன் இறந்த பிறகு தானும் இறத்தல் என்பது ஒரு நிலை; பெற்றிருக்கும் சேய்ச்செல்வத்திற்காகத் தானும் உயிர் தரித்தல் என்பது ஒரு நிலை. இவ்விரு நிலைகளும் காதல் உணர்வின் இரண்டு கூறுகளே இவ்விருவகை நிலையிலும் பழந் தமிழ்ப் பெண்டிர் வாழ்ந்தமையை இலக்கியங்களிற் காணலாம். பாண்டியன் நெடுஞ்செழியனின் இறப்பிற்குப் பின் 'தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள்போல்' இணையடி தொழுது வீழ்ந்த மடமொழியாம் பாண்டிமாதேவியை இளங்கோ வடித்த இன்சுவைக் காப்பியத்திற் காண்கின்றோம். பூதப் பாண்டியன் உயிர்த்துணைவியாம் பெருங்கோப்பெண்டின் ஆவிக் காதல் புறநானூற்றுல் இனிது உணரப்படும். கலிப்பகையார் இறப்பின் பின் தாமும் உடன் உயிர்நீப்பக் கருதிய் திலகவதியார், தம்பியார் திருநாவுக்கரசர் வாழவேண்டுமே என்ற கருணை கொண்டு உயிர் வாழ்ந்த வரலாற்றைச் செஞ்சொற் கவிவல்ல சேக்கிழார் பாடுகின்றூர்; "தம்பியார் உளராக வேண்டுமெனக் கொண்ட தயா" வினுல் (அன்பு) அம்பொன்மணி நூல் தாங்காது, அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி மனைத்தவம் புரிந்தார் அம் மாதரசியார் என்பது இங்கு எண்ணுதற்குரியது.

முற்றிலுங் கற்பனையா?

புலவர்கள் செய்யும் கற்பனை முற்றும் கற்பனை அன்று என்றும், அது நாட்டு நிலையை — சமுதாய நிலையை— ஆழ்ந்து சிந்தித்துக் கண்டு, அதனை ஒட்டியும் அதனினும் உயர்ந்தும்

உயர்த்தியும் செல்லும் வியத்தகு நுட்பம் வாய்ந்த படைப்புத் திறன் மிக்கது என்றும் அறிய இக் குறுந்தொகைப் பாடற்செய்தி துணை புரிகின்றது. ஆகவே புலவர்கள் இயற்றும் கவிதைகளில் வரும் செய்திகள் எல்லாம் கவியமைப்பிற்கு மட்டுமே உரியன என்று கூறி, உலகியற்கு உரியனவல்ல என்று கூறுதல் பொருந்தாது. இவற்றுட் சிலவும் பலவும் உலகியலுக்கும் ஏற்புடையன வாய் வரும் என்று கொள்ளுதல் வேண்டும்.

தொல்காப்பியர் அகத்திணையியலில் பாடும்போது,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்" (அகத் 56)

என்று குறிப்பிட்டிருப்பதை இவ்வகையில் நோக்கிப் பொருள் கொள்ளவேண்டும். இவற்றுள், உலக வழக்குக்கு இளம்பூரணர் தரும் விளக்கம்: 'உலகியல் வழக்காவது உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது'' (அகத் சூ 56 உரை) ஆதலின், "இவற்றிற் கூறியபடியே உலகியல் நிகழவேண்டும் என்பது வரையறையன்று; இவையனைத்தும் உலகியலுக்குப் புறம்பானவையென்று கொள்ளுதலும் தக்கதன்று" என்று டாக்டர் உ. வே. சா ஐயரவர்கள் தம் குறுந்தொகைப் பதிப்பிற் கூறியுள்ளமை நன்கு சிந்தித்து மேற் கொள்ளக் கூடிய ஒன்றாகும். (குறுந்தொகை - ஐயரவர்கள் பதிப்பு (4) 1962. பக். 20 காண்க.)

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்

க. சுப்பிரமணியன்,
தலைவர்,
பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்,
29, அண்ணுசாமி முதலியார் தெரு,
பெங்களூர். 560042.

தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு தமிழ் கன்னட உறவு ஆகியவைகளை வளர்க்கும் சிறந்த நிறுவனமாகப் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் திகழ்ந்து வருகின்றது. இந்நிறுவனம் அரசு மட்டத்தில் பதிவும் செய்யப்பெற்றுள்ளது.

தமிழ்நாடு, கருநாடக அரசுகளும், இந்திய அரசும் இச் சங்கக் கட்டிட நிதிக்கு உதவியளித்துள்ளன. தமிழ்ப் பெரு மக்களும், பிறமொழியாளர்களும் உதவியுள்ளனர். இரண்டரை இலட்ச ரூபாய் செலவில் ஓர் அழகிய கலையரங்கம் 1970ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பெற்றது.

பெருகிவரும் பல்வேறு பணிகளைத் தொடர்ந்து நடத்த 4—3—74 அன்று முதல் மாடி கட்டும் பணியைத் தொடங்கி யுள்ளோம்.

முதல் மாடிக் கட்டிடத்தில் நூலகம். படிப்பகம். ஆய்வுக் கூடம், வகுப்பறைகள் இடம் பெற உள. இக்கட்டிடத்தைக் கட்டி முடிக்க இரண்டரை இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பிடப் பெற்றுள்ளது.

இலக்கிய வகுப்பு: திருக்குறள் வகுப்பு நடைபெற்று வரு கிறது. இருபது பேர் குறள் பயில்கின்றனர். பல இலக்கிய வகுப்புகள் இடமின்மையால் துவங்கவியலாத நிலையில் உள்ளன.

கன்னட வகுப்பு: தமிழ் - கன்னட உறவை வளர்க்கும் நோக் குடன் 1962இல் கன்னட வகுப்புத் தொடங்கப்பட்டது. இவ் வாண்டு 200 மாணவர்கள் படிக்கிறார்கள். பல்வேறு மொழி யினரும். பல்வேறு தொழிலில் ஈடுபட்டவர்களும் இவ்வகுப்பில் படிக்கிறார்கள். இடமின்மையால் படிக்க விரும்புவோரில் ஐம்பது விழுக்காட்டினரின் விருப்பத்தை நிறைவேற்ற முடிய வில்லை.

தையல் வகுப்பு: ஆண்களும் பெண்களுமாக இருபத்தைந்து பேர் தையல் பயின்று வருகின்றனர்.

வீணை, வாய்ப்பாட்டு: பதினைந்து மாணவர் பயின்று வருகின்றனர்.

நாட்டிய வகுப்பு: ஒரு சப்பானியப் பெண் உட்பட பத்துப் பேர் இவ்வகுப்பில் பயிலுகின்றனர்.

மேற்கண்ட வகுப்புக்களைச் செம்மையாக நடத்தும் முகத்தான் முதல் மாடிக் கட்டிடப் பணி நடைபெற்றுவருகின்றது.

நூலகம்: தேவையான இடமின்மையால் நூலகம் சிறப்பாக இயங்கமுடியவில்லை. படிப்போர் எண்ணிக்கையும், நூல்களின் எண்ணிக்கையும் பெருகிவருதலால் பெரிய அளவில் நூலகக் கட்டிடம் தேவைப்படுகின்றது.

படிப்பகம்: ஐம்பதுக்கும் மேற்பட்ட நாள், கிழமை, திங்கள் ஏடுகளை மிகுதியானோர் நாள்தோறும் படித்து வருகின்றனர்.

ஆய்வுக்கூடம்: தமிழிலக்கியங்களைக் கன்னடத்திலும், கன்னட இலக்கியங்களைத் தமிழிலும் மொழிபெயர்த்து வெளியிடத் திட்டமுளது. செயலாற்றிட ஆய்வுக்கூடம் தேவைப்படுகின்றது.

வெளியூர்களிலிருந்து வருவோர் தங்குவதற்காக, இடம் அமைத்துத் தரவும் திட்டம் உள்ளது.

மேற்கண்ட தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுப்பப் பெறும் முதல் மாடிக் கட்டிடப் பணி முடிய இரண்டரை இலட்சம் ரூபாய் தேவைப்படும்.

அன்பர்கள் தாங்களே முன்வந்து வகுப்பறைகளைக் கட்டித் தரலாம்.

வெள்ளி விழா: இவ்வாண்டு வெள்ளி விழா ஆண்டாகும். வெள்ளி விழா நினைவாகக் கட்டிடம் கட்டி முடிக்கப்பெறுதல் வேண்டும். கருநாடக, தமிழ் நாட்டு அரசுகளும், நடுவண் அரசும், தொழிலதிபர்களும், கலைஞர்களும், பொதுமக்களும் உதவினால் இச்சீரிய பணி நன்முறையில் நிறைவேறும்.

தமிழன்பர்கள் இந்த அறப்பணிக்குப் பெரிதும் உதவ வேண்டுகிறோம் நன்கொடைத் தொகைக்கு உடனுக்குடன் பற்றுச் சீட்டு அனுப்பப்பெறும் மேலே குறிப்பிட்டுள்ள முகவரிக்குத் தொகை அனுப்பவேண்டும்.

உ

இயற்கைப் புலவர் கம்பர்

K. சோமசுந்தரம், B. A., B L, தஞ்சை.

(முற்றொடர்ச்சி துணர் ௪௯. மலர் ௧௧)

கம்பர். கடலினின்று எழும் மதியின் வண்ணக் காட்சியினில் பற்பல சிறப்பியல்புகளை உள்ளடக்கி. கூர்ந்த நோக்காலும் உள்ளெழுச்சியாலும், கற்பனைவளத்தைக் காட்டிய திறன் இறும்பூதற்பாலது, தண்மதி, கடலைக் கடைந்த ஞான்று உண்டாய அமிழ்தத்தை வேண்டிய அளவு உண்டு, மிஞ்சியதை அள்ளிக்கொண்டு வெளிப்போந்து அனலிடைப்பட்ட வெள்ளி போன்று நிலவாக வீசி, இராவணனது காதல் நோயைப் பெருக்கி, அவனது உள்ளத்தை வெள்ளிக் குழம்பு சுடுவதைப் போன்று சுட்ட பான்மையினை,

அருகுறு பாலின்வேலை யமுதெலா மளைந்துவாரிப்
பருகினன் பரந்து பாய்ந்த நிலாச்சுடர் பனிமென்கற்றை
நெரியுறு புருவச்செங்க ணரக்கற்கு நெருப்பினுப்ப
ணுருகிய வெள்ளியள்ளி வீசின லொத்ததன்றே.

என ஓர் உன்னதக் காட்சியால் ஓவியமாக்கியுள்ளார். காம நோயை வளர்த்து அதனுல் இராவணனது உயிர் போகும் அளவிற்கு துன்பத்தைத் தரும் காலனுகிய சந்திரன், பாற்கடலில் பாம்பின்மேல் பள்ளிகொள்ளும் திருமால், இராவணனை அழிப்பதற்கு, தக்க சமயம் நோக்கி விடுத்த சக்கரத்தைப் போலிருந்தது என்று கம்பர் கூறிய நயம் இங்கு உன்னியறிதற்பாலது.

அராவணை துயிலுமண்ணல் காலமோர்ந் தற்றநோக்கி
யிராவண னுயிர்மேலுய்த்த திகிரியு மென்னலானன்

இதனில் சந்திரனின் தன்மையினையும், சந்திரனைத் திருமாலின் சக்கரமாக ஒப்புமைப் படுத்திய பான்மையும், கம்பரது கற்பனைக் கருத்தின் ஆற்றலையும், உவமக் கவினையும் சிறப்பித்து ஓதப்பட்டிருத்தலைக் காண்க.

நன்றி மறவா மரபில் வாழ்ந்த கம்பர், தன்னை அன்பால் ஆதரித்துப் போற்றிய சடையப்ப வள்ளலை, கவிதைத் துறையில் பாராட்டி மகிழும் முறையில் அவனது புகழை மதியின் ஒளிக்கு ஒப்பிடலானுர். தண்மதியால் இருள் நீங்கி உலகில் வளமும்

ஒளியின்பமும் உளதாதல் இயல்பு. அதேபோன்று சடையப்ப வள்ளலுக்கு முன்னர், வையத்தில் வறுமையிருள் சூழ்ந்துள்ளதாகவும், அவரால் வளமும் இன்பமும் தோன்றியதென்றும், எங்கணும் பரவி நின்று விளங்கும் மதியின் ஒளியே போன்று, அவரது புகழ் எங்கும் பொலிந்து பரவியுள்ளதென்பதைக் கம்பர்,

வண்ணமாலை கைபரப்பி உலகை வளைந்த இருளெல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத் துதயத் தெழுந்தநிலாக் கற்றை
விண்ணுமண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக்கொண்ட
விரிநன்னீர்ப்
பண்ணைவெண்ணெய்ச் சடையன்றன் புகழ்போலெங்கும்
பரந்துளவால்

எனப் புகன்று தன் நன்றியுணர்வு இப்பாட்டில் கொழுந்தோடியுள்ளதையும் கூறுமல் உணர்த்தியுள்ளார்,

இஃது நன்றி மறவா இன்பத்தை முன்னிலையாக வைத்துக் கொண்டு, கருத்து நலம் வாய்த்த கற்பனை நயமுடைய பாட்டு, இதனில் இயற்கையில் தோய்ந்து கிடக்கும் அழகுணர்ச்சி, பொங்கி வழிவதற் கேற்றவாறு செவிக்குப் புலனுகும் முறையில் இனிய ஒலி நயத்தோடு சிறந்திருத்தலைக் கண்டு மகிழ்க. மற்றும் தண்மதியின் எழிலைக் காட்டுவதாக அமைந்த இப் பாட்டின் யாப்பும், யாப்பிற்குக் கட்டுப்பட்டு, மகிழ்ச்சி தரும் உணர்ச்சிக்கேற்றவாறு அமைந்து பாட்டிற்கும் தனிச்சுவையினையும் புகழின்பத்தையும் தந்துள்ளது. இதனுன் நம் மனநிலை அசைவுற்று இயற்கையால் ஒத்துணரும் பண்பு அலைகளை உண்டாக்குகின்றது. நிறைமதி நாட்களில் கடல்மிக்கு அலைகள் கொண்டு பொங்குவது இயற்கை யியல்பு, இதன்வழி ஒப்புமைப் பகுதியை உள்ளத்தால் உணருங்காலை இப்பாட்டு கம்பரின் அறிவுத் திறமையையும் உள்ளப் பண்பினையும், நன்றியுணர்வையும், தமிழ் மரபிற்கேற்ப புலப்படுத்தி சடையப்ப வள்ளலின் பற்பல இயல்புகளைச் சிதருமல் காத்து உள்ளடக்கி விளக்கங் காட்டுகின்றது. இத்தகைய விளக்கத்தின் வழி அறிவு, தண்மதியின் அழகில் ஈடுபட்டு நிலையாமை உணர்ச்சியில் முடிவாக நிலைபெறுதலால், மனம் சொலற்கரிய இயற்கையின்பம் எய்தி, அமைதி அடைவது வெள்ளிடை மலையாகும். நற்செய்கைகளால் பரவி நிலைபெறும் புகழை அறிவின் துணைகொண்டு அறத்திற்கு மாறுபடாதவாறு செய்தே பெறல் வேண்டுமென்பது கம்பரது அறிவுறூஉவாகும்.

(தொடரும்)

தமிழ் வாழ்க

மதிப்புரை

ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழக ஆண்டு விழா மலர்

தொகுப்பாசிரியர் : சி. கோவிந்தராசுலு. பக்கம் 154 விலை 3—00
கிடைக்குமிடம் ஷை கழகம் குத்தாலம். தஞ்சாவூர் மாவட்டம்

தேவார ஆசிரியர்கள் மூவராலும் பட்டினத்தடிகள் போன்ற அருளாளர்களாலும் பாடிப் பரவப்பெற்ற சைவத் தலமாகிய திருத்துருத்தி என்னும் குத்தாலத்தில் — தருமையாதீன முதற் குரவரின் பெயரால் திகழும் இவ் வார வழிபாட்டுக் கழகத்தின் ஆண்டுவிழாவின்போது வெளியிடப்பட்டுள்ள இம்மலருள் இலக்கிய உணர்வும் சமயப் பற்றும் உடைய நல்லறிஞர்களின் கட்டுரைகளும் கவிதைகளும் மணக்கின்றன, மேலும், திருக்கோயில் வழிபாட்டு விதிமுறைகளின் சுருக்கமும் சமய ஒழுக்கமும் — தொண்டு முறையும் சுட்டப்பட்டுள்ளன. மற்றும் சப்தவிடங்கத் தலங்கள் ஆலயக் குறிப்புக்களும் இடையிடையே தரப்பெற்றுள்ளன. சான்ரேர்களின் பொன்மொழிகளும் காணப்படுகின்றன, அன்றியும் சமயச் சார்புடைய புரவலர்கள் சிலரின் வரலாறும், குத்தாலத் தலத்தின் வரலாறும் வரையப்பட்டுள்ளன. கட்டுரைகள் நிறைய இடம்பெறவேண்டும் எனக் கருதியோ - தாள் முதலியவற்றின் விலையேற்றங் கருதியோ சிறிய எழுத்துக்களில் பல வண்ணத் தாள்களில் அச்சிடப் பெற்றுள்ள இம்மலரில் இடையிடையே வணிக விளம்பரங்கள் அமைந்து இதன் அழகை மாற்றியுள்ளன. சீரிய முயற்சியோடு வெளிவந்துள்ள இம்மலர் சமயப் பற்றுடைய அன்பர்களுக்குப் பயன்தரும் யாவர்க்கும் பயன்தரும் இலக்கியச் சுவை கமழும் கட்டுரைகளும் குறிப்புக்களும் உள, பெற்றுப் பயன்கொண்டு இக்கழகத்தாரை ஊக்குதல் நலம்.

2. குமரகுருபரன் 25-ஆம் ஆண்டு மலர்

திருப்பனசை காசிமடத்து வெளியீடு. பக்கம் 92. விலை 0-50
கிடைக்குமிடம் : குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீவைகுண்டத்திலிருந்து திங்கள் தோறும் வெளிவரும் குமரகுருபரன் திங்களிதழின் 25ஆம் ஆண்டுத் தொடக்க இதழ் ஆண்டு மலராகப் பூத்துள்ளது இவ்விதழுள் சைவத் திரு முறைகள் - சாத்திரங்கள் பற்றிய விளக்கக் கட்டுரைகளும் ஆய்வுரைகளும் - சமயச் சார்பான கட்டுரைகளும் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன, மேலும். தமிழ் இலக்கியக் கட்டுரைகளும் இடையிடையே உள. பல்துறை அறிஞர்களின் சீரிய கருத்துக் களைத் தாங்கி மணக்கும் இவ் ஆண்டு மலர் சமயச் சார்புடை யார்க்கேயன்றி யாவர்க்கும் பயன் தரும் வகையில் அழகாக மிளிர்கின்றது.

3. தமிழிசைப் பாமாலை

ஆசிரியர் : புலவர் அ. வைத்திலிங்கம், மண்டபம் முகாம், முகவை மாவட்டம் விலை குறிக்கப்படவில்லை.

இந்நூல் தமிழ் மொழியின் சிறப்பையும் ஆற்றலையும் எண்மையையும் தண்மையையும் இசைப் பாக்கள் வடிவத்தில் புகழ்ந்து பேசுகிறது. இதனுள் சங்க இலக்கியச் சால்பையும் திருக்குறள் மாண்பையும் கூறும் பகுதிகளும் பாடல்களும் சுவையாக அமைந்துள்ளன.

"இசைத்தமிழ் வளர்ந்திட வேண்டும் — எங்கள்
இதயத்தில் என்றென்றும் தமிழ்வாழ வேண்டும்"
"திருவருட் பாத்தந்த தமிழே — தெய்வத்
திருவருள் வேண்டுவோர் தேடிடும் துணையே"

எனத் தொடங்கும் பாடல்களால் ஆசிரியரின் தமிழ்ப் பற்றை யும் - செல்வர்களும். ஆற்றல் உடையவர்களும் தமிழ் மொழிக்குச் செய்யவேண்டிய பணிகளைச் சுட்டும் வேட்கையும் புலப்படு கின்றன.

"பாகுபோன்றது பைந்தமிழ்ச் சாறது
பருக இனியது பாருக்குரியது"

எனத் திருக்குறளை நயம்படக் காட்டுகின்றார் இவ் வாசிரியர். மேலும். தமிழ் அன்னை பத்துறுப்பு - சிந்து - கிளிக்கண்ணி முதலிய இசைப் பாடல்களின் அமைப்பிலும் சுவையான பாக்களைத் தொடுத்துள்ள இவ்வாசிரியர் மேலும் பல நூல்களை யாத்தளிக்கத் தமிழ் உலகம் ஊக்குமாக- தமிழ்ப் பற்றும் ஆர்வமும் உடைய யாவரும் இந்நூலைப் பெற்றுச் சுவைக்கலாம்.

— ச. பாலசுந்தரம்.

கந்தர் அனுபூதி – தெளிவுரை

நூலின் பெயர்; கந்தர் அனுபூதி ஆங்கில மொழி பெயர்ப்பு : தணிகை முருகன் அடிமை கந்தசாமி கதிர்வேல், பி. ஏ., பி. எல்., அவர்கள். தெளிவுரை : ஆசிரிய மணி புலவர் தணிகை உலகநாதன், J P. அவர்கள்.

வெளியீடு : திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் வெளியீடு. பக்கம் 96 விலை 75 காசுகள்.

அருணகிரிநாதர் முருகப் பெருமான் திருவருள் பெற்றுப் பாடிய நூல்கள் திருப்புகழ்; கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி என்னும் நான்குமாகும். அவற்றுள் கந்தரனுபூதி 51 பாடல்களைக் கொண்டது. கற்பவர் நெஞ்சக் கனகல்லை நெகிழ்ந்து உருகச்செய்யும் இப்பாடல்களை மந்திர ஆற்றல் வாய்ந்தவை என்றும், இவற்றைப் பாடி பாம்புக் கடி, கண்ணேறு ஆகியவற்றால் தீங்கு நேராது காப்பாற்றலாம் என்றும் கூறுவர். இந்நூலினைத் தமிழறியாத வேற்று மொழி யாளரும் கற்றுப் பயனடையும் வண்ணம் ஆங்கில மொழி பெயர்ப்புடனும், ஆங்கில மறியாத தமிழர்க்குப் பயன்படும்படி யாக எளிய நடையில் தெளிவுரையுடனும் அச்சிட்டு வெளி யிட்ட திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோவில் அறங்காவலர் குழுவினரையும் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. புலவர் நடேசன் அவர்களையும் பெரிதும் பாராட்டு கிறோம். ஆங்கில மொழிபெயர்ப்பும், தமிழ்த் தெளிவுரையும் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளன. அன்பர்கள் படித் துப் பயன்பெற வேண்டுகிறோம். முருகனது புகழ்பாடும் பிற தமிழ் இலக்கியங்களையும் இவ்வாறே எளிய நடையில் தெளிவுரை எழுதி மலிவுப் பதிப்பாக வெளியிடுமாறு அறங்காவலர் குழு வினரை வேண்டுகிறோம்.

— பி. விருத்தாசலம்.